பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
03 12 2024 7 15
செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக 5 நாள் பயணமாக இன்று ஒடிசா மாநிலத்திற்குச் செல்கிறார்.

2. மூன்று புதிய குற்றவியல் சட்டங்களின் வெற்றிகரமான அமலாக்கம் தொடர்பாக சண்டிகரில் இன்று நடைபெறும் நிகழ்ச்சியில் பிரதமர் திரு நரேந்திர மோடி பங்கேற்று உரையாற்றுகிறார்.

3. நாட்டில் 26 மில்லியன் ஹெக்டேர் தரிசு நிலங்களை 2030ஆம் ஆண்டுக்குள் விவசாயத்துக்கு உகந்த நிலமாக மாற்ற இலக்கு நிர்ணயித்து மத்திய அரசு செயல்படுவதாக சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு பூபேந்தர் யாதவ் கூறியுள்ளார்.

4. சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

5. ஆசிய ஜூனியர் ஹாக்கி போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று மலேசியாவை எதிர்கொள்கிறது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ----*</u>

<<<<>>>>

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக 5 நாள் பயணமாக இன்று ஒடிசா மாநிலத்திற்குச் செல்கிறார்.

பிரபல எழுத்தாளரும், கல்வியாளருமான பண்டிட் ரகுநாத் முர்முவின் சிலையை இன்று அவர் திறந்து வைக்கிறார்.

நாளை பூரி ஜெகன்நாதர் ஆலயத்தில் வழிபாடு மேற்கொள்ளும் குடியரசுத்தலைவர், பூரியில் உள்ள ஆயுர்வேத நிறுவனத்தின் பவள விழா கொண்டாட்டங்களில் பங்கேற்க உள்ளார்.

பூரி கடற்கரையில் நாளை நடைபெறும் கடற்படை தின நிகழ்ச்சிகளிலும் குடியரசுத்தலைவர் பங்கேற்கிறார்.

வரும் 5, 6 மற்றும் 7ஆம் தேதிகளில் புவனேஸ்வர், ராய்ரங்பூர் உள்ளிட்ட இடங்களில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் திருமதி திரௌபதி முர்மு பங்கேற்பதுடன், புதிய திட்டங்களைத் தொடங்கி வைத்து பல்வேறு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்ட உள்ளார்.

<<<<>>>>

மூன்று புதிய குற்றவியல் சட்டங்களின் வெற்றிகரமான அமலாக்கம் தொடர்பாக சண்டிகரில் இன்று நடைபெறும் நிகழ்ச்சியில் பிரதமர் திரு நரேந்திர மோடி பங்கேற்று உரையாற்றுகிறார்.

பிற்பகல் 12 மணிக்கு தொடங்கும் இந்நிகழ்ச்சி 'பாதுகாப்பான சமூகம், வளர்ச்சியடைந்த இந்தியா – தண்டனையில் இருந்து நீதி' என்ற கருப்பொருளில் நடைபெற உள்ளது.

கடந்த ஜூலை மாதத்தில் நாடு முழுவதும் அமலுக்கு வந்த இந்த சட்டங்கள் நாட்டில் நீதிமுறையை திறன்வாய்ந்ததாகவும், தற்காலத்திற்கு ஏற்ற வகையிலும் மாற்றியமைத்துள்ளது.

இந்த சட்டங்கள் குற்றவியல் நீதி அமைப்பில், நடைமுறையில் ஏற்படுத்தியுள்ள சிறந்த தாக்கங்களை எடுத்துரைக்கும் வகையில் இன்றைய நிகழ்ச்சி அமையும் என எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

நாட்டில் 26 மில்லியன் ஹெக்டேர் தரிசு நிலங்களை 2030ஆம் ஆண்டுக்குள் விவசாயத்துக்கு உகந்த நிலமாக மாற்ற இலக்கு நிர்ணயித்து மத்திய அரசு செயல்படுவதாக சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு பூபேந்தர் யாதவ் கூறியுள்ளார்.

சவுதி அரேபியாவில் நேற்று தொடங்கிய நிலம் பாலைவனமாதலைத் தடுப்பது தொடர்பான ஐ.நா. மாநாட்டில் பங்கேற்றுப் பேசிய அவர், பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்ள சிறப்பான செயல்திட்டங்களை இந்தியா செயல்படுத்தி வருவதாகக் கூறினார்.

2030ஆம் ஆண்டுக்குள் ஒரு ட்ரில்லியன் மரக்கன்றுகளை நட இலக்கு நிர்ணயித்து இந்தியா செயல்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நிலம் பாலைவனமாதலை தடுப்பதற்கான மாநாட்டின் தலைமைப் பொறுப்பை இந்தியா ஏற்றிருந்தபோது அறிவியல்பூர்வமான முக்கிய அணுகுமுறைகள் மேற்கொள்ளப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

இது உலகம் முழுமைக்கும் வழிகாட்டுவதாக அமைந்தது என்றும் அவர் கூறினார்.

இந்த மாநாட்டுக்கு இடையே சவுதி அரேபியா, கென்யா ஆகிய நாடுகளின் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்களுடன் இருதரப்பு பேச்சுவார்த்தையையும் திரு. பூபேந்தர் யாதவ் மேற்கொண்டார்.

<<<<>>>>

கேலோ இந்தியா திட்டத்தின் மூலம் சர்வதேசப் போட்டிகளில் இந்திய வீரர்கள் பதக்கம் வெல்வது அதிகரித்துள்ளது என மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி ஒன்றுக்கு எழுத்து மூலம் அவர் அளித்த பதிலில், நாடு முழுவதும் 21 விளையாட்டுகளில் 2 ஆயிரத்து 781 வீரர்களுக்கு கேலோ இந்தியா திட்டத்தின் மூலம் பயிற்சியும், உதவியும் வழங்கப்படுவதாகத் தெரிவித்தார்.

<<<<>>>>

சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளை நிலைநாட்டவும், அவர்களுக்கு அதிகாரம் அளிக்கவும் உலக அளவில் 1992ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 3ஆம் தேதி சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினமாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

இந்த தினத்தையொட்டி நாடு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

புதுதில்லியில் இன்று நடைபெறும் நிகழ்ச்சியில் மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக சிறப்பாக செயல்பட்ட 33 தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு விருதுகளை வழங்கி கௌரவிக்க உள்ளார்.

மாற்றுதிறனாளிகள் நலன் தொடர்பான 16 முக்கிய முன்முயற்சிகளை மத்திய சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சர் திரு. வீரேந்திர குமார் இன்று தொடங்கி வைக்க உள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தில் மத்திய அரசு சார்பில் சுற்றுலா மேம்பாட்டுத் திட்டங்களுக்கு 309 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மத்திய சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார்.

மக்களவையில் கேள்வி ஒன்றுக்கு அவர் எழுத்து மூலம் அளித்த பதிலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பிராசத் திட்டத்தின்கீழ் தமிழகத்தில் திங்களூர், ஆலங்குடி உள்ளிட்ட 8 நவகிரக ஸ்தலங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

மாமல்லபுரத்தில் பாரம்பரியப் பூங்கா அமைக்க 99 கோடி ரூபாயும், தேவாலாவில் மலர்த்தோட்டம் அமைக்க 70 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

சென்னை துறைமுகத்தில் பயணிகள் முனையத்தில் கப்பல் சுற்றுலா பயணிகள் வசதி மையத்திற்கான பணிகள் நிறைவடைந்தள்ளதாகவும் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் கூறினார்.

<<<<>>>>

தமிழகத்தில் பழங்குடியினரின் கலை, கலாச்சாரத்தைப் பாதுகாக்க மாநில அரசு முன்னுரிமை அளித்து செயல்படுதவாக மாநில ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு. மதிவேந்தன் தெரிவித்துள்ளார்.

அத்துறை சார்பில் சென்னையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கலை, இலக்கிய, சங்கம நிகழ்ச்சியில் நேற்று அவர் பங்கேற்றார்.

நிகழ்ச்சியில் பேசிய அவர், பழங்குடியினரின் வாழ்வியல், பண்பாடு ஆகியவற்றை விளக்கும் வகையில் இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டதாக கூறினார்.

பழங்குடியினரின் கலைவடிவங்களையும், பாரம்பரிய விளையாட்டுகளையும் பிரபலப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக திரு. மதிவேந்தன் தெரிவித்தார்.

<<<<>>>>

மத்திய அரசின் நுகர்வோர் விவகாரங்கள் அமைச்சகத்தின்கீழ் செயல்படும் தர நிர்ணய அமைப்பின் சார்பில் தமிழகத்தின் நெல்லையில் ஆசிரியர்களுக்கு தர நிர்ணயம் குறித்த விழிப்புணர்வு பயிலரங்கம் நடைபெற்றது.

தர நிலைகள் குறித்து ஆசிரியர்கள் மாணவர்களுக்கு விளக்கும் வகையில் இந்த பயிலரங்கம் நடத்தப்பட்டதாக இந்திய தர நிர்ணய அமைப்பின் மதுரை அலுவலக மூத்த இயக்குநர் திரு. தயானந்த் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தின் நீலகிரி மாவட்டம் முதுமலை புலிகள் காப்பகம் பகுதியில் பருவமழைக்குப் பிந்தைய தாவர உண்ணி, ஊண் உண்ணிகள் கணக்கெடுப்பு இன்று தொடங்குகிறது.

இது வரும் 9ஆம் தேதி வரை நடைபெற உள்ளதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

<<<<>>>>

கடற்படையை பயன்படுத்தும் வகையில் 26 ரஃபேல்-எம் போர் விமானங்கள் மற்றும் 3 ஸ்கார்பியன் நீர்மூழ்கிக் கப்பல்களை கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தம் விரைவில் கையெழுத்தாகும் என்று கடற்படை தலைமைத் தளபதி திரு. தினேஷ் திரிபாதி கூறியுள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கடற்படையில் புதிய தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படுவதாகக் கூறினார்.

அணுசக்தியில் இயங்கும் 2 போர்க் கப்பல்களை தயாரிக்க மத்திய அரசு அனுமதி அளித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடற்படைக்குப் பயன்படுத்தும் வகையில் 60 ஹெலிகாப்டர்களை கொள்முதல் செய்ய அரசு ஒப்புதல் அளித்துள்ளதாகவும் திரு. தினேஷ் திரிபாதி கூறினார்.

<<<<>>>>

ஆசிய ஜூனியர் ஹாக்கி போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று நடைபெறுகின்றன.

மஸ்கட்டில் இரவு மணி 8.30க்கு தொடங்கும் ஆட்டத்தில் இந்தியா – மலேசியாவை எதிர்கொள்கிறது.

இன்று நடைபெறும் மற்றொரு அரை இறுதி ஆட்டத்தில் பாகிஸ்தான் - ஜப்பானை எதிர்கொள்கிறது.

இறுதி ஆட்டம் நாளை நடைபெற உள்ளது.

-------------

ப்ரோ கபடி லீக் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் பெங்களூரு அணி – குஜராத் அணியை எதிர்கொள்கிறது.

மற்றொரு ஆட்டத்தில் புனே அணி – மும்பை அணியை எதிர்கொள்ள உள்ளது.

------------

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியின் நேற்றைய ஆட்டத்தில் ஜம்ஷெட்பூர் அணி – முகமதன் அணியை 3-1 என்ற கோல் கணக்கில் வென்றது.

------------

செகந்திரபாதில் நடைபெற்று வரும் தேசிய சப்ஜூனியர் ஹாக்கிப் போட்டியின் நேற்றைய ஆட்டங்களில் சண்டிகர் - அருணாச்சலப்பிரதேசத்தையும், மிசோரம் - கேரளாவையும், பஞ்சாப் - அசாமையும் வென்றன.

இதேபோல் மணிப்பூர் - தாத்ராநகர் ஹவேலியையும், ஆந்திரா – புதுச்சேரியையும் வென்றன.

--------------

ஆசிய மகளிர் ஹேண்ட்பால் சாம்பியன் போட்டி தில்லியில் இன்று தொடங்குகிறது.

இதில் ஜப்பான், ஈரான், கொரியா, சீனா உள்ளிட்ட நாடுகளின் வீராங்கனைகள் பங்கேற்கின்றனர்.

இன்றைய முதல் ஆட்டத்தில் இந்தியா – ஹாங்காங்கை எதிர்கொள்கிறது.

<<<<>>>>